# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 195/2017 | அரசு தரப்பு | அ.சா.8 |
| பெயர் | முகமது அலி ஜின்னா | | |
| தகப்பனார் பெயர் | சாப்ஜான் | | |
| வயது | 63 | | |
| முகவரி | | | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 2nd day of June 2026.

(**1** ஆம் அக்ரம் ஜிந்தா, **2** ஆம் எதிரி சதாம் உசேன் என்கிற சதாம், **3** ஆம் எதிரி சம்சுதீன் என்கிற சம்சு என்கிற கூளை சம்சு **4** ஆம் எதிரி அனு என்கிற அன்சாத், **5** ஆம் எதிரி ஜாபர் அலி என்கிற ஜாபர், **6** ஆம் எதிரி அப்துல் முனாப் என்கிற முனப் ஆகிய எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். )

முதல் விசாரணை

நான் நெ.1, கக்கன் வீதி, ரத்தினபுரி, கோவையில் குடியிருந்து வருகிறேன். நான் இஸ்லாமிய மதத்தில் பிறந்தவர். எங்கள் கடவுள் நம்பிக்கை அல்லா ஒருவனே. அல்லாவை தவிர வேறு எந்த கடவுளும் இல்லை. வேறு எந்த கடவுளையும் ஏற்க கூடாது, வணங்க கூடாது என்பதுதான் எங்களுடைய அடிப்படை கொள்கை. இந்து மதத்தில் எல்லா கடவுளையும் ஏற்கலாம். அல்லாவையும் ஏற்கலாம். ஆனால் எங்கள் மதத்தில் அவ்வாறு ஏற்கமுடியாது என்பதால் நான் கடவுள் மறுப்பாளராக மாறினேன்.

இந்த வழக்கில் கொலையுண்டு போன பாரூக்கை எனக்கு தெரியும். அந்த வழக்கு சம்மந்தமாகத்தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். நான் முகநூலில்

ஜின்னா மார்சு என்ற பெயரில் 2013 லிருந்து அக்கவுண்ட் வைத்திருந்தேன். அறிவியல் சார்ந்த கருத்துக்களோ, ஆதாரங்களோ இல்லாத கண்மூடித்தனமாக பின்பற்றும் பகுத்தறிவு அற்ற நம்பிக்கைகளை நான் ஏற்பதில்லை. நான் எனது முகநூல் வாயிலாக மேற்சொன்ன கருத்துக்களை இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின்படி பரப்புவேன். அவ்வாறு நான் செய்து கொண்டிருக்கும்பொழுது 2014 ல் முகநூல் (Messenger) வாயிலாக மனிதம், மனிதம் என்ற பேஸ்புக் ஐடி மூலம்  பாரூக் எனக்கு அழைப்பு அனுப்பியிருந்தார். அந்த அழைப்பை நான் ஏற்று அவரிடம் பேசிய பொழுது அவர் நானும் இஸ்லாமிய நார்த்திகன் என்று தன்னை என்னிடம் அறிமுகப்படுத்திக் கொண்டார்.  பாரூக் தான் நார்த்திக பண்பாட்டு இயக்கத்தில் உறுப்பினராக இருக்கிறேன் என்றும், அதில் நீங்களும் சேர்ந்து கொள்ளுங்கள் என்று என்னிடம் கூறினார். அதன்பிறகு இஸ்லாமியர் நார்த்திகர்களுக்கு என்று ஒரு தனி அமைப்பை வாட்ஸ் ஆப் மூலம் அல்முர்தத் என்ற பெயரில் ஆரம்பித்தோம். இதன் மூலமாக இஸ்லாமிய மதத்தில் உள்ள தவறான கொள்கைகளையும், அவர்கள் செய்யும் தவறுகளையும் சுட்டி காட்டி வந்தோம். அதனால் எங்களுக்கு பேஸ்புக் மூலமாகவே மிரட்டல்கள் வந்தன. பாரூக் கொலை செய்யப்படுவதற்கு ஒரு வாரம், 10 நாட்களுக்கு முன்பே SIC அமைப்பில் இருந்து 07-03-2017 அன்று போலீசார் என்னை அழைத்தார்கள். அந்த விவரத்தை நான் பாரூக்கிடமும், மற்றவர்களிடமும் கூறினேன். அதற்கு அவர்கள் வக்கீலை உடன் அழைத்து செல்லுங்கள் என்று கூறினார்கள். நான் 08-03-2017 அன்று லூயிஸ் என்ற வழக்கறிஞரை அழைத்துக் கொண்டு அங்கு சென்றேன். அங்கு இன்ஸ்பெக்டர் வெற்றி செல்வனை சந்தித்தேன். அப்பொழுது வெற்றி செல்வன் கோயமுத்தூர் ஒரு சென்சிட்டிவ்வான ஊர் அதனால் கடவுள் மறுப்பு கொள்கைகளை பதிவேற்றம் செய்யவேண்டாம் என்று என்னிடம்

கூறினார். அதற்கு நான் கடவுள் மறுப்பு கொள்கையை வைத்திருப்பது எனது உரிமை என்று நான் கூறினேன். அதற்கு அவர் என்னுடைய உயிர் பாதுகாப்பிற்காகத்தான் அவ்வாறு போடவேண்டாம் என்று கூறியதாக என்னிடம் கூறினார். பின்னர் பாதுகாப்பாக இருந்து கொள்ளுமாறு அறிவுரை கூறி அனுப்பினார். பின்னர் ரத்தினபுரி போலீசார் எனக்கு ஏதேனும் மிரட்டல்கள் வந்ததா என்று கேட்டனர். அதற்கு நான் கடவுள் மறுப்பு கொள்கை இருந்தால் மிரட்டல்கள் வரத்தான் செய்யும் அதை கடந்துதான் செல்லவேண்டும் என்று நான் கூறினேன். 09-03-2017 அன்று காலையில் ஒரு போலீசார் வீட்டிற்கு வந்தார். பின்பு மாலையும் ஒரு போலீசார் வீட்டிற்கு வந்தார். மாலையில் வந்த போலீசார் மறுநாள் என்னை காவல் நிலையத்திற்கு வருமாறு கூறினார்.

செப்டம்பர் 22, 2016 ல் இந்து அமைப்பை சேர்ந்த சசிகுமார் என்பவர் படுகொலை செய்யப்பட்ட காரணத்தினால் பாரூக்கை குண்டர் சட்டத்தில் போலீசார் அடைத்தனர். அந்த சமயத்தில் இந்து முஸ்லீம் பிரச்சனை இருந்து வந்த காரணத்தினால் முஸ்லீம் பெயர் வைத்திருந்த பாரூக்கையும் கைது செய்தார்கள். பின்னர் டிசம்பர் 7, 2016 ல் அவரை விடுதலை செய்தார்கள். பின்னர் சுமார் ஒரு மாதம் கழித்து பாரூக் ஒரு நபருடன் என்னை வந்து சந்தித்தார். அந்த நபரை முனாப் என்று என்னிடம் அறிமுகப்படுத்தி அவரும் நமது கொள்கையில் ஈடுபாடு கொண்டவராக இருப்பதாகவும், நம்மோடு சேர்ந்து பணியாற்ற விருப்பமாக இருப்பதாகவும் என்னிடம் கூறினார். முனாப்பை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். சாட்சி ஆஜரில் இருக்கும் எதிரிகளில் முனாப்பை சரியாக அடையாளம் காட்டினார். முனாப் இன்று இளநீலநிற சட்டையில் ஆஜராகியிருந்தார். சட்டையின்நிறத்தை குறிப்பிட்டும்,

எதிரிகளி ஒவ்வொருவராக கையை தூக்கி காண்பித்தபோது முனாப் கையை தூக்கும்பொழுது அவர்தான் என்று சாட்சி அடையாளம் காண்பித்தார்.

பின்னர் அவரையும் அல்முர்தத் என்ற வாட்ஸ்ஆப் குரூப்பில் சேர்க்குமாறு பாரூக் என்னிடம் கூறினார். நான் அந்த குரூப்பின் அட்மினாக இருந்ததால் முனாப்பையும் அந்த குரூப்பில் சேர்த்தேன். பின்னர் சுமார் ஒரு மாதம் கழித்து சாகுல் என்பவரையும் அழைத்து கொண்டு பாரூக்கும், முனாப்பும் என்னை பார்க்க வந்தார்கள். அப்பொழுது பாரூக்கும், முனாப்பும் சாகுலின் போன் நெம்பரை கொடுக்குமாறு கேட்டதற்கு சாகுல் தான் வெளிநாட்டிற்கு வேலைக்காக செல்ல இருப்பதால் போன் நெம்பரை கொடுத்தாலும் பேச வாய்ப்பு இல்லை என்று கூறினார். தற்போது நான்கூறிய சம்பவங்கள் அனைத்தும் நடந்த பின்புதான் நான் மேற்கூறியவாறு SIC யிலிருந்து போலீசார் என்னை அழைத்தார்கள். பாரூக் கொலை செய்யப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நான் பாரூக்கை பார்த்தேன். அப்பொழுது பாரூக் SIC யிலிருந்து போலீசார் எதற்காக அழைத்தார்கள் என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் கடவுள் மறுப்பு கொள்கைகளை போடுவதால் பாதுகாப்பாக இருக்குமாறு போலீசார் என்னிடம் அறிவுரை கூறியதாக நான் அவரிடம் கூறினேன். அதற்கு பாரூக் எனக்கும், எனது நண்பர்களிடமிருந்து அதுபோன்ற மிரட்டல்கள் தனக்கு வருவதாக என்னிடம் கூறினார். அதற்கு நான் பாரூக்கிடம் கவனமாக இருந்து கொள் என்றும், யாரிடமும் வம்புவழக்கு வேண்டாம் என்றும், அவர்களிடம் வாக்குவாதம் செய்யவேண்டாம் என்றும் நான் கூறினேன். அதற்கு அடுத்தநாள் 14-03-2017 அன்று பாரூக் முகநூலில் " நார்த்திகன் விவாதம் முடித்த பிறகு வேறு நிகழ்விற்கு சென்று விடுவான். ஆர்த்திகள் விவாதம் முடிந்த பிறகும்

நார்த்திகன் மீது கோபத்துடன் இருப்பான் என்று பதிவிட்டிருந்தார் “. தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் இருக்கும் வாசகம்தான் அப்பொழுது பாரூக் பதிவேற்றம் செய்ததாகும். அந்த ஆவணம் அ**.**த**.**சா**.**ஆ**.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கு முன் 13-03-2017 அன்று பாரூக் அவரது முகநூலில் கடவுள் மறுப்பு...... பகுத்தறிவு.... பேசுவதால்.... நண்பருக்கும், உறவினருக்கும் நான் தொழில் செய்யும் சக வியாபாரிகளுக்கும் நான் எதிரியாக தெரிகிறேன் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது நான் கடவுளின் எதிரி, மதத்தின் எதிரி, சாதியின் எதிரி, ஆக மொத்தம் மூடத்தின் எதிரி, மனிதம் என்ற மனிதனுக்கு நான் எதிரியல்ல என்று பதிவிட்டிருந்தார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம்தான் அவர் பதிவேற்றம் செய்ததாகும். அது அ**.**தா**.**சா**.**ஆ**.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

17-03-2017 அன்று முனாப் அதிகாலை 2 மணிக்கு என்னை தொலைபேசியில் அழைத்து பாரூக்கை கொலை செய்து விட்டார்கள் என்றும், தன்னையும் கொலை செய்து விடுவார்கள் என்று பயமாக இருப்பதாகவும் என்னிடம் கூறினார். உடனே புறப்பட்டு வாருங்கள் என்று கூறினார். நான் வருகிறேன் என்று கூறி போனை வைத்தேன். பின்னர் போலீசார் என்னை அழைத்து அறிவுரை கூறியது எல்லாம் ஞாபகத்திற்கு வந்து பைத்தியம் பிடித்தவர்போல் நான் சிறிது நேரம் அமர்ந்து விட்டேன். நான் உடனே எனது இன்னொரு நண்பரான பிரோஸ்பாபுவிடம் பரூக்கை கொலை செய்து விட்டதாக முனாப் என்னிடம் தெரிவித்ததையும், அவருக்கு பயமாக இருப்பதால் என்னை வருமாறு அவர் அழைத்ததையும், ஒரு வாரத்திற்கு முன்பு போலீசார் என்னை எச்சரிக்கை செய்ததையும் நண்பரிடம் கூறி நான் செல்லலாமா, வேண்டாமா

என்று அறிவுரை கேட்டேன். அதற்கு என் நண்பர் எக்காரணத்தை கொண்டும் வாசற்படி தாண்டவேண்டாம் என்றும், இல்லையேல் பாரூக்கை கொன்றதுபோல் உன்னையும் கொன்று விடுவார்கள், வெளியில் செல்லவேண்டாம் என்று கூறியதால் நான் எங்கும் செல்லவில்லை. பின்னர் காலை 8 மணி அளவில் நான் கோயமுத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனையில் திராவிட கழகத்தை சேர்ந்த தோழர்கள் நிறைய பேர் இருந்தார்கள். அவர்களுடன் நானும் இருந்தேன். அப்போது பிணவறையில் இருந்த பாரூக்கின் உடலை நானும் பார்த்தேன். அவருடைய உடலில் வெட்டுக்காயங்களும், குத்துக்காயங்களும் இருந்தன. அப்பொழுதுதான் நான் போலீசார் எனக்கு அறிவுரை கூறியதுபோல் நடக்காமல் இருந்திருந்தால் எனக்கும் இந்த கதிதான் ஏற்பட்டிருக்கும் என்று அப்பொழுதுதான் நான் உணர்ந்தேன். பின்னர் பாரூக்கின் உடலை அவருடைய தந்தையின் விருப்பம்போல் இஸ்லாமிய முறைப்படி அடக்கம் செய்யும்வரை நானும் அங்குதான் இருந்தேன். பின்னர் நான் வீட்டிற்கு செல்லும் வழியில் அன்சாத் என்பவர் போலீசில் சரண் அடைந்ததாக தகவல் கிடைத்தது. வீட்டிற்கு சென்று இரண்டு நாட்களுக்கு பின்னர் சதாம், மற்றும் சம்சுதீன் இருவரும் பாரூக் கொலை சம்மந்தமாக சரண் அடைந்ததாக பேப்பரை பார்த்து தெரிந்து கொண்டேன். பின்னர் 4,5 நாட்களுக்கு பின்னர் பாரூக் கொலை சம்மந்தமாக முனாப், அக்ரம்ஜிந்தா, ஜாபர் ஆகிய மூவரையும் போலீசார் கைது செய்திருப்பதாக தெரிந்து கொண்டு அதிர்ச்சி அடைந்தேன். அப்பொழுதுதான் முனாப் ஒரு உளவாழியாக எங்களுடன் சேர்ந்திருந்தது எனக்கு தெரிய வந்தது.

பாரூக் உயிருடன் இருக்கும்போது மனிதம், மனிதம் என்ற முகநூல் முகவரியையும், பாரூக் டி.வி.கே. என்ற முகநூல் முகவரியும், பாரூக், பாரூக்

டி.வி.கே என்ற முகவரியும் வைத்திருந்தார். பாரூக் கொலை செய்யப்பட்டவுடன் மற்றும் முனாப் கைது ஆன பின்பு அந்த குரூப்பில் இருந்த உறுப்பினர்கள் உயிர் பயத்தினால் அதிலிருந்து விலகி கொண்டார்கள். அதன் பின்பு அல் முர்தத் என்ற அமைப்பையும் Close செய்து விட்டோம். பாரூக் கொலையானது குடித்துவிட்டு ரகளையில் ஈடுபட்டதாலோ அல்லது வேறு மதத்தினராலோ நடக்கவில்லை. மதம் சம்மந்தப்பட்டு மத வெறியால் நடந்துள்ளது. இது சம்மந்தமாக என்னை 20-04-2017 ல் சி.பி.சி.ஐ.டி போலீசார் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள்.

**1,3** மற்றும் **6** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு **8** வயதில் சுன்னத் செய்யப்பட்டது**.** சுன்னத் செய்த பிறகுதான் முஸ்லீம் என்று எடுத்துக் கொள்வார்கள் என்றால் சரியல்ல**.** பிறந்தவுடன் பெயர் வைத்து அரசு பதிவேடுகளில் வந்தாலே அந்த நபரை முஸ்லீம் என்றுதான் அழைப்பார்கள்**.** இஸ்லாத்தில் ஜமாத் என்ற ஒரு அமைப்பு உண்டு**.** அதற்கு நான் செல்வதில்லை**.** எந்த பள்ளிவாசலிலிருந்து எனக்கு சுன்னத் செய்யப்பட்டது என்று எனக்கு தற்போது நினைவில்லை**. 20** வருடங்களுக்கு முன்பு வரை நான் பள்ளிவாசலுக்கு சென்றுள்ளேன்**.** கோயமுத்தூரில் உள்ள அர்த்தர் ஜமாத்திற்கு சென்றுள்ளேன்**.** ஒவ்வொரு ஜமாத்திற்கும் நிர்வாகி என்ற ஒருவரும்**,** உறுப்பினர்களும் இருப்பார்கள்**.** நான் அர்த்தர் ஜமாத்தில் உறுப்பினராக இருந்ததில்லை**.** ஆனால் எனது பெற்றோர்களும்**,** தாத்தா**,** மூதாதையர்களும் உறுப்பினர்களாக இருந்துள்ளார்கள்**.** நான் உறுப்பினராக இல்லாததால் ஜமாத்திற்கும்**,** எனக்கும் எந்த தொடர்பும் இல்லையென்று நான் எழுதி எதுவும் கொடுக்கவில்லை**.** அல் **(**லாஹி**)** முர்தத் என்பது முஸ்லீம் மதத்திலிருந்து விலகி விட்டேன் என்று அர்த்தமாகும்**.** அந்த இயக்கத்தை ஆரம்பித்தது நாகூரை சேர்ந்த

முகமது சாதிக் என்று சொன்னால் சரிதான். அந்த வாட்ஸ்ஆப் குரூப்பில் உறுப்பினராக சேருவதற்கு அட்மிட் ஆகவேண்டும் என்று சொன்னால் சரிதான். அந்த வாட்ஸ்ஆப் குரூப்பில் பாரூக் என்னை உறுப்பினராக அட்மிட் செய்தார். அந்த குரூப்பில் பாரூக்கை நான் அட்மிட் செய்தேன். அந்த வாட்ஸ்ஆப் குரூப்பில் கிறிஸ்தவர்கள் மற்றும் இறை மறுப்பாளர்களும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்றால் சரிதான். இறை மறுப்பாளர்கள் என்பது அல்லாவையும் சேர்த்துதான் என்று சொன்னால் சரிதான். நானும் ஒரு இறை மறுப்பாளர்தான். நான் கடந்த **20** வருடங்களாக இறை மறுப்பாளராக இருந்து வருகிறேன். இறை மறுப்பு கொள்கைகளை வாட்ஸ்ஆப் மற்றும் முகநூலில் போடுவது வழக்கம் என்று சொன்னால் சரிதான். நான் கடவுள் இல்லை என்று மட்டும்தான் போடுவேன்ள ன்றும், நான் ஒரு நபரையோ, தலைவரையோ மதம் சம்மந்தப்பட்டவைகளையோ, தலைவர்களை கிண்டல் செய்யவோ, கீழ்த்தரமாகவோ, இழிவாகவோ போஸ்ட் போட மாட்டேன் என்று சொன்னால் சரிதான். ஆனால் மேற்சொன்ன எனது கொள்கைகளை பின்பற்ற வேண்டும் என்று நான் பாரூக்கிடம் எப்பொழுதும் கூறியதில்லை. அது அவரவர்களுக்குள்ள உரிமையாகும். நான் கூறுவதுபோல் பாரூக் இறை மறுப்பாளராகவோ, இஸ்லாத்திற்கு எதிராகவோ இருந்ததில்லை என்றும், அவர் இஸ்லாமியராக தான் கடைசி வரை வாழ்ந்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. பாரூக் இஸ்லாத்தை விட்டு எப்பொழுதும் விலகியதில்லை என்றும், வழக்கிற்காக அவர் இஸ்லாத்தில் இல்லையென்று நான் தவறாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. இஸ்லாத்தை விட்டு யாரும் வெளியில் செல்ல முடியாது என்று சொன்னால் சரியல்ல.

தற்போது நான் முதல் சாட்சியத்தில் கூறியதுபோல், அல்லாவை தவிர வேறு எந்த கடவுளும் இல்லை, வேறு எந்த கடவுளையும் ஏற்க கூடாது, வணங்க கூடாது என்பதுதான் எங்களுடைய அடிப்படை கொள்கை. இந்து மதத்தில் எல்லா கடவுளையும் ஏற்கலாம். அல்லாவையும் ஏற்கலாம். ஆனால் எங்கள் மதத்தில் அவ்வாறு ஏற்கமுடியாது என்பதால் நான் கடவுள் மறுப்பாளராக மாறினேன் என்று இப்பொழுது நான் கூறியதை போலீசார் விசாரணையில் நான் கூறினேனா என்றால், போலீசார் என்னிடம் கேட்கவில்லை. அதனால் நான் கூறவில்லை.

அதேபோல் முதல் சாட்சியத்தில் நான் கூறியிள்ள, முகநூலில் ஜின்னா மார்சு என்ற பெயரில் **2013** லிருந்து அக்கவுண்ட் வைத்திருந்தேன். அறிவியல் சார்ந்த கருத்துக்களோ, ஆதாரங்களோ இல்லாத கண்மூடித்தனமாக பின்பற்றும் பகுத்தறிவு அற்ற நம்பிக்கைகளை நான் ஏற்பதில்லை. நான் எனது முகநூல் வாயிலாக மேற்சொன்ன கருத்துக்களை இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின்படி பரப்புவேன் என்ற விவரத்தை நான் போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால், போலீசார் என்னிடம் கேட்கவில்லை, அதனால் நான் கூறவில்லை.

அதேபோல் எனது முதல் சாட்சியத்தில் நான் குறிப்பிட்ட, பாரூக் எனக்கு அழைப்பு அனுப்பியிருந்தார். அந்த அழைப்பை நான் ஏற்று அவரிடம் பேசிய பொழுது அவர் நானும் இஸ்லாமிய நார்த்திகன் என்று தன்னை என்னிடம் அறிமுகப்படுத்திக் கொண்டார். பாரூக் தான் நார்த்திக பண்பாட்டு இயக்கத்தில் உறுப்பினராக இருக்கிறேன் என்றும், அதில் நீங்களும் சேர்ந்து கொள்ளுங்கள் என்று என்னிடம் கூறினார். அதன்பிறகு இஸ்லாமியர் நார்த்திகர்களுக்கு என்று

ஒரு தனி அமைப்பை வாட்ஸ் ஆப் மூலம் அல்முர்தத் என்ற பெயரில் ஆரம்பித்தோம். இதன் மூலமாக இஸ்லாமிய மதத்தில் உள்ள தவறான கொள்கைகளையும், அவர்கள் செய்யும் தவறுகளையும் சுட்டி காட்டி வந்தோம். அதனால் எங்களுக்கு பேஸ்புக் மூலமாகவே மிரட்டல்கள் வந்தன என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் நான் கூறினேனா என்றால், கூறினேன்.

அதே போல் முதல் சாட்சியத்தில் கூறியவாறு, **10** நாட்களுக்கு முன்பே **SIC** அமைப்பில் இருந்து **07-03-2017** அன்று போலீசார் என்னை அழைத்தார்கள். அந்த விவரத்தை நான் பாரூக்கிடமும், மற்றவர்களிடமும் கூறினேன். அதற்கு அவர்கள் வக்கீலை உடன் அழைத்து செல்லுங்கள் என்று கூறினார்கள். நான் **08-03-2017** அன்று லூயிஸ் என்ற வழக்கறிஞரை அழைத்துக் கொண்டு அங்கு சென்றேன் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் நான் கூறினேன்.

அதேபோல் முதல் சாட்சியத்தில் கூறியவாறு, அப்பொழுது வெற்றி செல்வன் கோயமுத்தூர் ஒரு சென்சிட்டிவ்வான ஊர் அதனால் கடவுள் மறுப்பு கொள்கைகளை பதிவேற்றம் செய்யவேண்டாம் என்று என்னிடம் கூறினார். அதற்கு நான் கடவுள் மறுப்பு கொள்கையை வைத்திருப்பது எனது உரிமை என்று நான் கூறினேன் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் நான் கூறினேனா என்றால் அவர்கள் அதை கேட்கவில்லை, அதனால் நான் கூறவில்லை.

அதேபோல் முதல் சாட்சியத்தில் நான் கூறியுள்ள, ரத்தினபுரி போலீசார் எனக்கு ஏதேனும் மிரட்டல்கள் வந்ததா என்று கேட்டனர். அதற்கு நான் கடவுள் மறுப்பு கொள்கை இருந்தால் மிரட்டல்கள் வரத்தான் செய்யும் அதை கடந்துதான்

செல்லவேண்டும் என்று நான் கூறினேன். **09-03-2017** அன்று காலையில் ஒரு போலீசார் வீட்டிற்கு வந்தார். பின்பு மாலையும் ஒரு போலீசார் வீட்டிற்கு வந்தார். மாலையில் வந்த போலீசார் மறுநாள் என்னை காவல் நிலையத்திற்கு வருமாறு கூறினார் என்ற விவரத்தை போலீசாரிடம் நான் கூறினேனா என்றால், அவர்கள் என்னை கேட்கவில்லை, அதனால் நான் கூறவில்லை.

மேலும் முதல் சாட்சியத்தில் நான் கூறியுள்ள, செப்டம்பர் **22, 2016** ல் இந்து அமைப்பை சேர்ந்த சசிகுமார் என்பவர் படுகொலை செய்யப்பட்ட காரணத்தினால் பாரூக்கை குண்டர் சட்டத்தில் போலீசார் அடைத்தனர். அந்த சமயத்தில் இந்து முஸ்லீம் பிரச்சனை இருந்து வந்த காரணத்தினால் முஸ்லீம் பெயர் வைத்திருந்த பாரூக்கையும் கைது செய்தார்கள். பின்னர் டிசம்பர் **7, 2016** ல் அவரை விடுதலை செய்தார்கள். பின்னர் சுமார் ஒரு மாதம் கழித்து பாரூக் ஒரு நபருடன் என்னை வந்து சந்தித்தார் என்ற விவரத்தை போலீசார் என்னை விசாரித்தபோது நான் கூறினேன்.

மேலும் நான் முதல் சாட்சியத்தில் கூறியுள்ள, பின்னர் அவரையும் அல்முர்தத் என்ற வாட்ஸ்ஆப் குரூப்பில் சேர்க்குமாறு பாரூக் என்னிடம் கூறினார். நான் அந்த குரூப்பின் அட்மினாக இருந்ததால் முனாப்பையும் அந்த குரூப்பில் சேர்த்தேன் என்ற விவரத்தை போலீசாரிடம் நான் கூறினேனா என்றால், அவர்கள் கேட்கவில்லை, அதனால் நான் கூறவில்லை.

மேலும் நான் முதல் சாட்சியத்தில் கூறியுள்ள, பாரூக் கொலை செய்யப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நான் பாரூக்கை பார்த்தேன். அப்பொழுது பாரூக் **SIC** யிலிருந்து போலீசார் எதற்காக அழைத்தார்கள் என்று

என்னிடம் கேட்டார். அதற்கு நான் கடவுள் மறுப்பு கொள்கைகளை போடுவதால் பாதுகாப்பாக இருக்குமாறு போலீசார் என்னிடம் அறிவுரை கூறியதாக நான் அவரிடம் கூறினேன். அதற்கு பாரூக் எனக்கும், எனது நண்பர்களிடமிருந்து அதுபோன்ற மிரட்டல்கள் தனக்கு வருவதாக என்னிடம் கூறினார். அதற்கு நான் பாரூக்கிடம் கவனமாக இருந்து கொள் என்றும், யாரிடமும் வம்புவழக்கு வேண்டாம் என்றும், அவர்களிடம் வாக்குவாதம் செய்யவேண்டாம் என்றும் நான் கூறினேன் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் நான் கூறினேனா என்றால், நான் சுருக்கமாக கூறினேன்.

மேலும் முதல் விசாரணையில் நான் கூறியுள்ள, பின்னர் போலீசார் என்னை அழைத்து அறிவுரை கூறியது எல்லாம் ஞாபகத்திற்கு வந்து பைத்தியம் பிடித்தவர்போல் நான் சிறிது நேரம் அமர்ந்து விட்டேன் என்ற விவரத்தை போலீசார் விசாரணையின்பொழுது கூறினேனா என்றால், சுருக்கமாக கூறினேன்.

மேலும் முதல் விசாரணையில் நான் கூறியுள்ள, பின்னர் பாரூக்கின் உடலை அவருடைய தந்தையின் விருப்பம்போல் இஸ்லாமிய முறைப்படி அடக்கம் செய்யும்வரை நானும் அங்குதான் இருந்தேன் என்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால், தந்தையின் விருப்பம்போல் என்று நான் கூறவில்லை, அடக்கம் செய்யும்வரை அங்கு இருந்ததாக கூறினேன்.

அ.த.சா.ஆ.**10** மற்றும் **11** எனது செல்போனிலிருந்து பதிவிறக்கம் செய்து பிரிண்ட் எடுத்து கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். போலீஸ் அலுவலகத்தில் வைத்து பதிவிறக்கம் செய்து பிரிண்ட் எடுக்கப்பட்டது. அந்த விவரங்களை பதிவிறக்கம் செய்வதற்காக என்னிடமிருந்து செல்போனை வாங்கி

வைத்து பதிவிறக்கம் செய்த பின்னர் போனை என்னிடம் கொடுத்து விட்டார்கள். என்னை விசாரித்தவர் டி.எஸ்.பி கேடரில் இருந்தார். அவருடன் இருந்தவர் அதை பதிவிறக்கம் செய்தார். அவருடைய பெயர் எனக்கு தெரியாது. நான் முதல் சாட்சியத்தில் கூறியதுபோல் பாரூக் அவரது முகநூலில் எவ்வித பதிவேற்றமும் செய்யவில்லை என்றும், அந்த பதிவேற்றங்கள் அனைத்தும் நானும், சாதிக்கும், எங்கள் இயக்க உறுப்பினர்களும் வழக்கிற்காக வேறு பெயரில் ஏற்றியது என்று சொன்னால் சரியல்ல. அல் முர்தத் என்ற இயக்கத்திற்கும், பாரூக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சம்பவம் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு ரத்தினபுரியில் என்னை பாரூக் நேரடியாக பார்த்து என்னிடம் இறை மறுப்பு கொள்கையை போஸ்ட் செய்வதால் என்னை தீர்த்து கட்டுவதாக எங்க ஏரியாவில் உள்ள சிலர் பேசிக் கொள்வதாக பாரூக் என்னிடம் சொன்னார் என்ற விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் கூறினேன்.

**17-03-2017** ஆம் தேதி ஜி.எச்சிற்கு வந்து பாரூக்கின் பாடியை பார்த்தேன். பாரூக்கின் உடலில் உள்ள வெட்டு மற்றும் குத்து காயங்களை பார்த்ததும் எனக்கு நடக்கவேண்டியது அவனுக்கு நடந்திருச்சு என்று தோனுச்சு என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் நான் கூறினேன்.

பாரூக் எவ்வித கடவுள் மறுப்பு கொள்கையையும் வைத்திருக்கவில்லை என்றும், இஸ்லாத்திற்கு எதிராக பேசியதில்லை என்றும், **RSS** மற்றும் பி.ஜே.பி மீது உள்ள பயத்தினாலும், இந்த விரோதத்தை மேற்கொண்டு வளர்க்கக் கூடாது என்று போலீசார் நிர்பந்தம் செய்த காரணத்தினாலும், கலந்து ஆலோசித்து இந்த

எதிரிகளை இந்த வழக்கில் சேர்த்திருக்கிறார்கள் என்றும், பரூக்கிற்கும், முஸ்லீம் மதத்திற்கும், இந்த எதிரிகளுக்கும், இந்த சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. நான் போலீசாரிடம் கூறிய மேற்சொன்ன விவரங்களை வேறு யாரிடமும் கூறவில்லை.

முனாப்பை மூன்று முறை பார்த்துள்ளேன். ஜனவரி முதல் மார்ச் **2017** ற்குள் மூன்று முறையும் பார்த்தேன். சம்பவம் நடப்பதற்கு மூன்று வருடங்களுக்கு முன்பு பாரூக்கை பார்த்தேன். இடையில் ஒரு ஆறு மாதம் பார்க்காமல் இருந்தேன். பின்னர் அடிக்கடி பார்த்து கொண்டோம். அந்த விவரத்தை போலீசாரிடமும் கூறியுள்ளேன். நான் முதன்முதலில் பாரூக்கை கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒப்பணக்கார வீதிக்கு வரச்சொல்லி டீக் கடையில் நேராக வைத்து பேசியதாக போலீசார் விசாரணையில் நான் கூறியுள்ளேன். என்னுடைய போன் நெம்பர், பிரோஸ் போன் நெம்பர், முனாப்பின் போன் நெம்பரை போலீசார் கேட்டு பெற்றுக் கொண்டார்களா என்றால், முனாப் நெம்பரை ஏற்கனவே போலீசார் பெற்றிருந்தார்கள். எனது போன் நெம்பரையும், பிரோஸ்கான் போன் நெம்பரையும் போலீசாரிடம் நான் கொடுத்தேன். முனாப்பை இன்று நீதிமன்றத்தில் நீல நிற சட்டை போட்டிருப்பதாக நான் கூறினேன். இன்று நீதிமன்றத்தில் வேறு யாரும் நீல நிற சட்டை போட்டிருக்கவில்லை. நான் முனாப்பை இதற்கு முன்பு பார்த்ததுமில்லை, சந்தித்ததுமில்லை என்றும், தற்பொழுது சொல்லி கொடுத்து அவரை அடையாளம் காட்டியுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

<u>**2** மற்றும் **4** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**1, 3** மற்றும் **6** எதிரிகளின் குறுக்கு விசாரணையை முற்றிலுமாக ஏற்றுக் கொள்கிறார்கள்**.**

<u>**5** எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**1, 3** மற்றும் **6** எதிரிகளின் குறுக்கு விசாரணையை முற்றிலுமாக ஏற்றுக் கொள்கிறார்கள்**.**

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்**/**முகமது அலி ஜின்னா**,**

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.